DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No.177/2022**
**prosecution witness: Pw 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிவேல் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**26.05.2023**
முதல் விசாரணை:-

1. நான் பேக்கரும்பில் வசித்து வருகிறேன். இறால் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 21.08.2020-ம் தேதி மாலை 4 மணியளவில் மண்டபம் மரைக்காயர் பட்டிணத்தில் உள்ள கேஸ் குடோன் அருகே இராமேஸ்வரத்தில் இருந்து தில்லை ராஜன் என்பவர் நொச்சியூரனிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

2. அப்போது எதிர் திசையில் இருந்து காரில் வந்த ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து தில்லைராஜன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக அருகில் இருந்த நபர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். அப்போது தில்லை ராஜன் மயக்க நிலையில் இருந்தார். பின்னர் அவரை காரில் ஏற்றி மதுரை ஹானா ஜோசப் தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். மறுநாள் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கில் இறந்து போன நபர் எனது உறவினர் என்றால் துாரத்து உறவினர். சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான் போன் மூலம் தகவல் வந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

2. இது சம்பந்தமாக போலீசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி பின்னிட்டு நான் விசாரித்த போது இறந்து போன நபர் மது போதையில் இருந்தார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு இழப்பீடு பெறுவதற்கு வழக்கு தாக்கல் செய்து அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.